**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி**
**OS.05/2021 . நாள்.24.10.2024**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. நசீம் பேகம் அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | செல்வராஜ் | **வயது** | 73 |
| **த/பெ. க/பெ.** | ராமசந்திரன் | **மதம்** | |
| **முகவரி** | பண்ணந்தூர் | **தொழில்** | விவசாயம் |

**<u>வா.சா.2 ஆஜர். 4–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. தாவா சொத்து விவரங்கள் எனக்கு தெரியும். கணேசன், பெரியண்ணன், சக்திவேல், இளங்கோ ஆகியோர்கள் மீது சொத்து வழக்கு போட்டுள்ளார். என்ன பட்டா எண்ணில், எவ்வளவு விஸ்தீரணத்திற்க்கு எத்தனை சர்வே எண்கள் குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் பட்டா எண்.661 மற்றும் 646 ஆகிய பட்டா எண்களுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எந்த சர்வே எண், எவ்வளவு விஸ்தீரணம் என்று என்னால் சொல்ல இயலாது. எந்த தேதியில் வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் பாகப்பிரிவினை ஏற்ப்பட்டது என்றால் தேதி தெரியாது. ஆனால் வருடம் 1970 ஆகும். அந்த பாகப்பிரிவினை ஆவணத்தில் எந்த சர்வே எண்ணில் யார் யாருக்கு எவ்வளவு விஸ்தீரணத்தில் சொத்துக்கள் பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது.

2. பாகப்பிரிவினை ஆவணத்தில் கண்ட சொத்து விவரங்கள் தெரியாத நிலையில் யார் எந்த சர்வே எண்ணில் விஸ்தீரணத்தில் சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்று என்னால் சொல்ல இயலாது என்று சொன்னால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் பாக ஆவணம் ஏற்ப்படுத்தி கொண்ட பின்னர் பி.கே முத்து மாரி கவுண்டர் நிலம் விற்பனை செய்யததாக கூறியுள்ள நிலையில் எந்த சர்வே எண் சொத்தை எவ்வளவு விஸ்தீரணத்திற்க்கு யாருக்கு எந்த தேதியில் எவ்வளவு தொகைக்கு விற்பனை

செய்யப்பட்டது என்றால் 1972 ஆம் வருடம் மீனாட்சிக்கு முத்து மாரிக்கவுண்டர் விற்பனை செய்துள்ளார்.

3. சர்வே எண்.235/1P, 235/L, 235/A ஆகும். அது மட்டும் தான் தெரியும். நான் சொல்வது போல் சொல்கின்ற சர்வே எண்ணில் எவ்வித விற்பனையும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் விற்பனை செய்த நிலம்போக மீதி சொத்துக்கள் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் அதன் விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

4. ஒரு சொத்து பொருத்து பட்டா மாற்றம், சிட்டா மாற்றம் எவ்வாறு நடைப்பெறும் என்று எனக்கு தெரியும். பட்டாவில் பெயர் மாற்றமானது முறையான விசாரணைக்கு பின்னிட்டு நடைப்பெறும் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்களைப் பொருத்து சிட்டாவில் சக்திவேல், இளங்கோ, பெரியண்ணன் பெயர்கள் தற்போது உள்ளது என்றால் சரிதான். வாதி, பிரதிவாதிகள் சிட்டாவில் உள்ளபடி சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் கூட்டு அனுபவம் சுவாதீனத்தில் இருந்து வரும் விவரம் எனக்கு நன்றாக தெரியும் என்று சொன்னால் சரியல்ல. வாதி கணேசன் அனுபவத்தில் உள்ளது.

5. வாதி, பிரதிவாதிகளுக்கு இடையே அவர்களது குடும்பத்திற்க்குள் தாவா சொத்துக்களைப் பொருத்து எத்தனை ஆவணங்கள் ஏற்ப்படுத்தியுள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. வழக்கு சங்கதிகள் வாதி என்னிடம் சொல்லி என்ன சாட்சியம் அளிக்க வேண்டும் என்று சொல்லி கேட்டதின் பெயரில் நான் சாட்சியம் அளக்க வந்துள்ளளேன் என்று சொன்னால், நான் உழவர் மன்ற தலைவராக இருப்பதால் அரசு வழங்கும் மானியம் விவசாயிகளுக்கு வாங்கி தருவேன் அதன் அடிப்படையில் கணேசனுக்கும் வாங்கி தந்தேன் அதனால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வழக்கு சங்கதிகள், சாட்சிய சங்கதிகள் கணேசன் சொல்லிதான் தெரியும் என்றால் வழக்கு சங்கதிகள் கணேசன் சொல்லி தெரியும். கணேசன் எனக்கு வேண்டியர் என்பதாலும், பிரதிவாதிகள் விரோதம் என்பதாலும் கணேசனுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

6. பிரமாண பத்திரத்தில் கண்ட சங்கதிகள் அனைத்தும் வழக்கிற்க்கு சம்மந்தப்படாதது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பாகம் பிரிக்கப்படாதா கூட்டு அனுபவத்தில் உள்ள சொத்துக்கள் என்று தெரிந்தும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களில் பிரதிவாதிகள் தற்போதும் கூட்டு அனுபவத்தில் உள்ளார்கள் என்றும் அந்த விவரமும் எனக்கு தெரியும் என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

SHANMUGANATHAN
District Munsif cum
Judicial Magistrate
Digitally signed by
SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.